உ
சிவமயம்

# செய்தி மடல்

அகில இலங்கை இந்து மாமன்றம்
ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
கார்த்திகைத் திங்கள்
09ஆம் நாள்
25.11.2009

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02, இலங்கை
தொலைபேசி : 011 2434990 – தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

# முகாம்களில் வாழும் மக்கள் அவர்கள் விரும்பும் இடங்களுக்கு சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே மாமன்றத்தின் நிலைப்பாடு

## இந்த மடலில்....



பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாமன்றத்தின் நிதியுதவி. (பக்கம் – 2)



மன்னார் கருத்தரங்கின் போது நந்திக் கொடி ஏற்றப்படுகிறது. (பக்கம் – 3)



சுவி வாழ் பக்தர்களது அன்பளிப்பு. (பக்கம் – 4)

## மாமன்றம் ஜனாதிபதிக்கு கடிதம்

கடந்த கால போர்ச் சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மக்களை விடுவிப்பதற்கும் அவர்களது மீள்குடியேற்றம் தொடர்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளது.

மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் இது சம்பந்தமான கடிதமொன்றை இம்மாதம் 21ம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார். இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

முகாம்களில் வாழும் மக்கள், அவர்கள் விரும்பும் இடங்களுக்கு சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே இந்து மாமன்றத்தின் நிலைப்பாடாக இருந்தது. அத்துடன் அவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவதும் விரும்பத்தக்கது. இது விடயத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ பசில் ராஜபக்ஷவிற்கும் மாமன்றம் நன்றி தெரிவிப்பதுடன், அத்தகைய நடிவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கின்றது.

கௌரவ பசில் ராஜபக்ஷவிடம் மாமன்றம் விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்ப முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்து மத குருமார்களையும் முதியோர்களையும் மாமன்றம் பொறுப்பேற்று, அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கியிருப்பதுடன், தங்களது சொந்த இடங்களுக்குச் செல்லவும் மாமன்றம் உதவியிருக்கிறது. மாமன்றத்தின் பராமரிப்பின் கீழ் திருக்கேதீஸ்வரத்தில் இயங்கும் முதியோர் இல்லம் அமைப்பதற்கு உதவியமைக்காக அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி வி. ஜெகராஜசிங்கம் ஆகியோருக்கும் மாமன்றம் நன்றி தெரிவிக்கிறது.

நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையிலான கொடுப்பனவை மாமன்றம் வழங்கி வருகிறது. இது விடயத்தில் லண்டனிலுள்ள ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவல் சபையினரும் ஏனையோரும் மாமன்றத்திற்கு உதவி வருகிறார்கள்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்...)

## மாமன்றத்தின் அஞ்சலி



அமரர் ச. சரவணமுத்து



அமரர் செ. குணரத்தினம்

(3ம் பக்கம்...)

